# அப்பிளும் திராட்சையும் நிறைந்த கண்டிச் சீமை

**பகுதி II**

**2**

## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

கண்டிய மன்னனிடமிருந்தும் கண்டிய விவசாயிகளிடமிருந்தும் பறித்தெடுத்த நிலங்களில் மீண்டும் பாரம்பரிய உற்பத்தி முறையான நெல் உற்பத்தி முறையை மேற்கொள்ள ஆங்கிலேயர் விரும்பவில்லை.

அங்கு தங்களது ஐரோப்பியப் பாணியிலான பாரிய பண்ணை உற்பத்தி முறையை உருவாக்கவே அவர்கள் விரும்பினார்கள். ஏற்கனவே கண்டியைச் சூழவுள்ள பகுதிகளில் ஒல்லாந்தர் காலத்தில் கோப்பிப் பயிர்ச் செய்கை பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அவர்கள் அதை பெரியளவுக்கு வர்த்தகப் பயிராகப் பயன்படுத்தவில்லை.

ஆங்கிலேயர்களோ ஒல்லாந்தர்களின் பரீட்சார்த்த அனுபவத்தை வைத்துக்கொண்டு கோப்பியை ஒரு பெருந்தோட்டப்பயிராக மாற்ற முயன்றனர். ஆனால் துரதிர்ஷ்டவசமாக கோப்பிச் செடியில் ஏற்பட்ட ஒருவித நோய் அதை அசாத்தியமாக்கிவிட்டது. எனவே கோப்பிக்கு மாற்றாக தேயிலையையும், இறப்பரையும் அங்கு பயிரிட அவர்கள் முடிவு செய்தனர்.

இதற்கென மிக அதிகளவிலான தொழிலாளர் படை ஒன்றை திரட்ட வேண்டிய தேவை அவர்களுக்கு ஏற்பட்டது. இந்தத் தொழிலாளர் படையை கண்டிய விவசாயிகளிடமிருந்து திரட்ட அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் ஆபத்தானவர்கள் என்ற எண்ணம் ஆங்கிலேயருக்கு இருந்தது. அதே நேரம் கரையோரச் சிங்களவர்கள் மத்தியிலிருந்தோ, யாழ்ப்பாண வன்னித் தமிழர்கள் மத்தியிலிருந்தோ கூட தொழிலாளர்களைத் திரட்ட அவர்கள் விரும்பவில்லை. அதற்குக் காரணம் அக்கால கட்டத்தில் ஐரோப்பியாவில் முளை விட்டிருந்த சோசலிசக் கருத்துக்களாகும்.

1780-ல் நடந்த பிரெஞ்சுப் புரட்சியும், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட விஞ்ஞான தொழில் நுட்ப ரீதியான மறுமலர்ச்சிகளும், நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பைத் தகர்த்துக் கொண்டு முதலாளித்துவ சமூக உருவாக்கம் பெறுவதற்கு பெரும் உந்து சக்தியாக விளங்கின. முதலாளித்துவ சமூக அமைப்புக்கு உரித்தான தொழில்மயமாதலும், நகரமயமாதலும், நிலப்பிரபுத்துவ சமூகத்தில் விவசாயக் கூலிகளாகவும், பண்ணையடிமைகளாகவும் இருந்த மக்களை தொழிலாளர் படையாக மாற்றியது.

எப்போதும், 'பழமைவாதத்தை' காப்பதில் அக்கறை கொண்ட பிரித்தானிய ஆளும் வர்க்கம் ஒழுங்கமைக்கப்பட்ட தொழிலாளர் படையையிட்டு எச்சரிக்கையாகவே இருந்து வந்திருக்கிறது. அந்த வகையில் இலங்கையின் மத்திய மலைப் பிரதேசத்தில் தமிழர்களோ, சிங்களவர்களோ யாராக இருந்தாலும் இலங்கையர்கள் மத்தியிலிருந்து ஒரு தொழிலாளர் படையை உருவாக்குவது எதிர்காலத்தில் தங்களது ஆட்சிக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்று அவர்கள் கருதினார்கள்.

அமெரிக்க நிலங்களில் வேலை செய்வதற்காக தமது முன்னோர்கள் ஆபிரிக்கநாட்டுக் கறுப்பின மக்களை வேட்டையாடி பிடித்துச் சென்றதுபோல் தமிழ்நாட்டு மக்களை இலங்கைக்குப் பிடித்துவர அவர்கள் விரும்பினார்கள். குறிப்பாக தமிழ்நாட்டு மக்களை அவர்கள் தேர்ந்தெடுத்ததற்கு கபடத்தனமான அரசியல் காரணம் ஒன்று இருந்தது. அதாவது இலங்கையிலுள்ள தமிழர்களும், சிங்களவர்களும் தங்களுக்கெதிராக ஒன்று சேர்ந்துவிடாதபடி தமிழர்களால் தமிழ்நாட்டுத் தொழிலாளர்களைவைத்தே இன முரண்பாட்டைக் கூர்மைப் படுத்துவதற்கான அடித்தளம் ஒன்றை இடுவது அவர்கள் நோக்கமாக இருந்தது.

அதற்கு 19_ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தமிழ்நாட்டின் இராமநாதபுரம் புதுக்கோட்டை மதுரை மாவட்டங்களில் ஏற்பட்ட கொடிய பஞ்சமும், அந்தப் பகுதிகளில் அந்தக் காலத்தில் நிலவிய கொடிய சாதிய அடக்கு முறைகளும் வாய்ப்பாக அமைந்தன.

வாழ்வுக்கும் சாவுக்குமிடையில் போராடிக் கொண்டிருந்த அந்த மக்களை ஆங்கிலேயர்களிடம் கையூட்டுப் பெற்ற தரகர்கள் (கங்காணிகள்) அணுகி 'கண்டிச்சீமை' கதையை அவிழ்த்து விட்டனர்.

காசு பணம் தேவையில்லை, தகுதி அந்தஸ்த்து அவசியமில்லை, ஆணும் பெண்ணும் வரலாம், குடும்பத்துடன் வரலாம். குந்தியிருக்க சொந்தநிலம், குடியிருக்க வீடு, அப்பிளும், திராட்சையும் கொட்டிக் கிடக்கும் சொர்க்கபூமி, வேலையில் கஷ்டமில்லை, தொல்லையில்லை, கைநிறையச் சம்பளம் என்றெல்லாம் இந்தத் தமிழக மேட்டுக்குடித் தரகர்கள் கட்டி விட்ட கதையை நம்பி தென் தமிழ் நாட்டைச்சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள், தங்கள் முன்னோதையர் வாழ்ந்த, தாங்கள் பிறந்து வளர்ந்த, தங்கள் சொந்த மண்ணை விட்டுப் புறப்பட்டனர்.

புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களிலிருந்த கிராமங்களிலிருந்து அந்த மக்களை கிளப்பும் வரை வார்த்தை ஜாலங்கள் செய்து தேனொழுகக் கதைத்த ஆங்கிலேயரின் ஆள் பிடிகாரத் தரகர்கள், இராமேஸ்வரத்துக்கு அவர்கள் வந்து சேர்ந்ததும் பட்டிகளில் ஆடு மாடுகளை அடைப்பதைப்போல சிறிய கப்பல்களில் அடைத்து அடிமைகளைப் போல் அதட்டி மிரட்டி மன்னாருக்குக் கொண்டு சென்றனர்.

இவ்வாறு, கப்பலில் மன்னார் போய் சேருவதற்கு முன்னே பலர் வயிற்றோட்டம், வாந்திபேதி, அம்மை நோய் கண்டு மடிந்து விட்டனர். மன்னார் இறங்கு துறையிலிருந்து கால் நடையாக அடர்ந்த காடுகளூடாக மலையகத்திற்கு அழைத்துச் செல்லப்படும் போது சாப்பாடு இல்லாமலும், தண்ணீர் இல்லாமலும் மயங்கி விழுந்து மடிந்தவர்கள் ஆயிரம் ஆயிரம்பேர். மலேரியா, வயிற்றோட்டம், சின்னம்மை, பெரியம்மை, பூச்சிக்கடி, பாம்புக்கடி, போன்றவற்றாலும் கரடி, புலி, ஓநாய்கள் போன்ற கொடிய காட்டு மிருகங்கள் தாக்கியும் யானைகள் அடித்து மிதித்தும் உயிரிழந்து போனவர்கள் ஆயிரமாயிரம் பேர்.

கணவரும் மனைவியும், தந்தையும் மகனும், தாயும் பிள்ளைகளும், அண்ணனும் தம்பியும், தங்கையுமாக தங்கள் அன்புக்குரியவர்கள் தங்கள் கண்முன்னாலேயே துடிதுடித்து வீழ்ந்து மடியும்போது அவர்களை அநாதைப் பிணங்களாய் இறந்த இடத்திலேயே குழி தோண்டிப் புதைத்துவிட்டும், வீசி எறிந்து விட்டும் அவர்களுக்காக கண்ணீர் சிந்தக்கூட கால அவகாசம் கொடுக்காமல் அடித்து விரட்டி அழைத்துச் செல்லப்பட்ட கொடுமை இந்த மக்களுக்கு நிகழ்ந்தது.


குற்றுயிரும் குறையுயிருமாய் கண்டிக்கு வந்தபின்பும், இந்த மக்களின் துயரம் முடியவில்லை. அவர்கள் தமிழ்நாட்டிலிருந்த போது வெள்ளை எஜமானின் கைக்கூலிகளான கங்காணிகள் சொன்னதுபோல் அங்கு அப்பிளும் திராட்சையும் கொட்டிக் கிடக்கவில்லை. குந்தியிருக்க சொந்தநிலம் குடியிருக்க சொந்தவீடு கிடைக்கவில்ல.

கொடிய வெய்யிலும், கடும் வரட்சி நிலவும் அனல் பிரதேசத்திலும் வாழ்ந்து பழக்கப்பட்ட அந்த மக்களுக்கு கண்டியக்குளிர், வெள்ளை எஜமானர்களும், அவனது கைக்கூலிகளான கங்காணிகளும் செய்யும் கொடுமையைவிட கொடூரமானதாக இருந்தது.

போர்த்திக் கொள்ள நல்ல போர்வையில்லாமல், போட்டுக்கொள்ள நல்ல உடுப்புகள் இல்லாமல் , படுத்துறங்க நல்ல இடம் இல்லாமல், சாப்பிட நல்ல உணவு இல்லாமல் மாடுகளைப்போல அந்த மக்கள் உழைக்க வைக்கப்பட்டார்கள். அடித்து உதைத்து வேலை வாங்கப்பட்டார்கள்.

இன்றைக்கு சிங்கள இனவாதிகள் சொல்வது போல், தமிழ்நாட்டிலிருந்து போய் இறங்கியவுடனேயே கண்டிய சிங்கள விவசாயிகளின் நிலத்தில் போய் குடியேறி அதை ஆக்கிரமித்து தேயிலை, இறப்பர் தோட்டங்களை அமைத்து விடவில்லை. சிங்கள விவசாயிகளோ, சிங்கள நிலப்பிரபுக்களோ வாழ்க்கையில் ஒரு நாள் கூட நுழைந்தே இருக்காத காடுகளை அவர்கள் வெட்டினார்கள். அங்கிருந்த கற்பாறைகளை அவர்கள் தகர்த்தார்கள். அங்கு தேயிலை, இறப்பர் தோட்டங்களாக அமைக்கப்பட்ட ஒவ்வொரு அங்குல நிலமும் தமிழ்நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் வியர்வையாலும் இரத்தத்தாலுமே உருவாக்கப்பட்டது.

**- நக்கீரன்**



இந்தியத் தமிழ்த் தொழிலாளர்கள் இலங்கைத் தோட்டங்களுக்கு அழைத்து வரப்படுவதற்கு முன்னர் ஒன்று திரட்டப்பட்டு குடிசைகளில் தங்க வைக்கப்பட்டனர். இது சுமார் 65 ஆண்டுகளுக்கு முன்னர் எடுக்கப்பட்ட படம்.

**கணவரும் மனைவியும், தந்தையும் மகனும், தாயும் பிள்ளைகளும், அண்ணனும் தம்பியும், தங்கையுமாக தங்கள் அன்புக்குரியவர்கள் தங்கள் கண் முன்னாலேயே துடிதுடித்து வீழ்ந்து மடியும்போது அவர்களை அநாதைப் பிணங்களாய் இறந்த இடத்திலேயே குழி தோண்டிப் புதைத்துவிட்டும், வீசி எறிந்துவிட்டும் அவர்களுக்காக கண்ணீர் சிந்தக்கூட கால அவகாசம் கொடுக்காமல் அடித்து விரட்டி அழைத்துச் செல்லப்பட்ட கொடுமை இந்த மக்களுக்கு நிகழ்ந்தது.**

படிப்பகம்